**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 16-12-2022**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-12-16 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-12-17 | 2022-12-18 | 2022-12-19 | 2022-12-20 | 2022-12-21 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 2.0 | 0.0 | 4.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 30.0 | 30.0 | 30.0 | 29.0 | 28.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 19.0 | 18.0 | 18.0 | 18.0 | 18.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 60 | 60 | 60 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12.0 | 8.0 | 6.0 | 12.0 | 12.0 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 70 | 90 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 7 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

டிசம்பர் 18,20,21தேதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 28-30 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 18-19 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50-60 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 6-12 கி.மீ வரை வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 21.12.2022 முதல் 27.12.2022 வரை இயல்பை விட அதிக மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து தாக்கம் தென்பட்டால் அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பூக்கும் நிலையில் உள்ள

| |
|---|
| காய்கறிப்பயிர்களுக்கு 1.5% பிபிஎப்எம் (Pink Pink-Pigmented Facultative Methylotrophs) இலை வழியாக தெளிக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் லேசான மழை, வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளதால் பூச்சிகொல்லி /களைக்கொல்லி மருந்துடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெற்பயிரில் இலை மடக்கு புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த பைபிரினில் 1 மி.லி /லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக நாற்றங்கால் வயல்களில் படைப்புழு தாக்கம் காணப்படுகிறது.இதனை கட்டுப்படுத்த 250 மி.லி மண்ணெண்னையை 1 கிலோ மணலுடன் கலந்து தூவ வேண்டும். பனி அதிகமாக இருப்பதால் நெல்லில் குலைநோய் தென்படுகிறது. குலைநோயை கட்டுப்படுத்த அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC பூசணக்கொல்லியை ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி என்ற வீதத்தில் தெளிக்க வேண்டும். நெல் வயல்களில் 1% பிபிஎப்எம் தெளிக்க வேண்டும். மேலும் நைட்ரஜனை நிலைப்படுத்துவதற்கு அசோலா இட வேண்டும். |
| கரும்பு | முன்பருவத்தில் நடவு செய்யப்பட்ட கரும்பு பயிரின் எடையை குறைக்க தோகை உரித்து விட்டம் கட்ட வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ / எக்டர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி /லிட்டர் ஊற்ற வேண்டும். |
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு 5 ரைனோ லூர் இனக்கவர்ச்சிபொறிகளை அமைக்க வேண்டும். சுருள் வெள்ளை ஈக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த ஏக்கருக்கு என்கார்சீயா குவாடலூபே ஒட்டுண்ணிகளை @ 100 வீதம் விட வேண்டும் அல்லது வேப்ப எண்ணெய் @ 10 மி.லி அல்லது அசாடிராக்ட்டின் 1% @5 மி.லி /லிட்டர் தெளிக்க வேண்டும் அல்லது மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் (நீளம் 5 அடி x அகலம் 1.5 அடி ) ஏக்கருக்கு 10 வீதம் 6 அடி உயரத்தில் வைக்க வேண்டும். |
| தக்காளி | தக்காளியில் மகசூல் அதிகரிக்க டிரைக்கான்டனால் 1.25 பி பி எம் (625 மி.லி மருந்து 500 லிட்டர் நீரில் கலந்து ) நடவு செய்த 15 நாட்களுக்கு பின்பும், பூக்கும் பருவத்திலும் தெளிக்க வேண்டும் . |
| கத்திரிக்காய் | கத்தரியில் தண்டு மற்றும் காய்ப்புழு தாக்கத்தின் பயிர் மேலாண்மை முறை: பாதிக்கப்பட்ட அல்லது சேதப்பட்ட இலைக்குருத்து அல்லது நுனித்தண்டு மற்றும் பாதிக்கப்பட்ட |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | காய்கள் போன்றவற்றை சேகரித்து அழிக்க வேண்டும். ஒரே இடத்தில் தொடர்ச்சியாக கத்தரி பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். 1.5% (PPFM) நுண்ணுயிர் உரத்தை இலை வழி தெளிப்பதன் மூலம் பூக்கள் உதிர்வதை தடுத்து, காய்களின் தரம் உயர்வதுடன், எண்ணிக்கையையும் பெருக்கலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடைகளை குளிரிலிருந்து பாதுகாக்கவும், உடல் வெப்பநிலையை சீராக பராமரிக்கவும் வெதுவெதுப்பான குடிநீரை அளிக்க வேண்டும். கால்நடைகளை வெளிப்புற ஒட்டுண்ணிகளான உண்ணி மற்றும் பேன் போன்றவை தாக்காமல் இருக்க மருந்து குளியல் கொடுக்க வேண்டும். |
| வெள்ளாடு | சல்பாடிமிடின் என்ற மாத்திரை ஒன்று, இரண்டையும் அரைத்து 40 மில்லி தண்ணீரில் கரைத்து வாய் வழியே ஊற்றி விட வேண்டும்.ஆறு மாத குட்டி எனில் மேல் சொல்லப்பட்ட மாத்திரையில் அரை மாத்திரையும், மூன்று மாத குட்டி எனில் மேல் சொல்லப்பட்ட மாத்திரையில் கால் மாத்திரையும் மூன்று நாட்களுக்கு கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி தர வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | மழை மற்றும் குளிர்ச்சி காரணமாக கோழி மற்றும் கோழிக்குஞ்சிகளில் சளி ஏற்பட்டால் சிகிச்சையாக என்ரோசின் பி.ஹெச் (ENROCIN BH ) என்ற மருந்தை ஒரு லிட்டர் குடிநீரில் 1 மி.லி வீதம் நான்கு நாட்களுக்கு தரவேண்டும். கோழிக்குஞ்சிகளுக்கு முதல் இரண்டு வாரங்களில் வெப்பமூட்டிகளை பயன்படுத்தி சுற்றுசூழலை கதகதப்பாக வைத்து கொள்ள வேண்டும். முட்டையிடும் கோழிகளுக்கு தீவனத்தில் 5 % கிளிஞ்சல்கள் அல்லது சுண்ணாம்பு சத்துள்ள பொருட்களை கலந்து கொடுக்க வேண்டும். கோழி கொட்டகையை சுற்றிலும் படுதாவைக்கொண்டு மறைவு கட்ட வேண்டும். |